DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 394/2022 DW : 1

Name : சுதர்சன் Age –

S/o : அவிநாசியப்பன் Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 27.01.2026

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். நானும், 2ம் பிரதிவாதியும் வாதியை அனுகினோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1–ஐ 92,33,992/– ரூபாய்க்கு கிரயம் பெற்றேன். வா.சா.ஆ.1–ஐ நான என் வழக்கிறிஞர் மூலம் தயார் செய்தேன் என்றால் சரிதான். மேற்சொன்ன தொகையை இரண்டு காசோலைகளாக பிரசாத் என்பவரிடம் கொடுத்தேன். இரண்டு காசோலைகளின் எண். 14.02.2018 அன்று ரூ.25,00,000/– முன்பனமாக காசோலை மூலம் கொடுத்துள்ளேன். அதே தேதியில் இன்னோரு காசோலை மூலமாக 25,00,000/– மீண்டும் கொடுத்தேன். அடுத்து 22.03.2018 அன்று காசோலை மூலம் 21,15,496/– ரூபாய் கொடுத்தேன். அதே தேதியில் இன்னோரு காசோலை மூலமாக 21,15,496/– ரூபாய் கொடுத்தேன். நான்கு காசோலைகளையும் நான் தான் எழுதினேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான்கு காசோலைகளும் மணி பெயரில் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்னது போல் 25,00,000/– தலா இரண்டு காசோலைகள் நான் வாதியிடம் கொடுக்கவில்லை என்றாலும், நான் அந்த காசோலைகளை பிறகு தருவதாக சொன்னதன் அடிப்படையில் தான் வாதி தாவா சொததை கிரையம் செய்து கொடுத்தார் என்று சொன்னால் நான் காசோலைகளை பவர் ஏஜென்ட் பிரசாத்–யிடம் கொடுத்தேன். வா.சா.ஆ.1–ஐ வாதி தான் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. பிரசாத் தான்

எழுதிக்கொடுத்தார். வா.சா.ஆ.1–ல் பிரசாத் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மூலம் வாதி தான் எனக்கு நேரடியாக தாவா சொத்தை விற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

2) வா.சா.ஆ.4 என்னுடைய முகவரிற்க்கு தான் வாங்கினேன். வா.சா.ஆ.3–ல் உள்ள விபரங்கள் நான் படித்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3–ல் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் உண்மை என்பதால் நான் அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. வேமூல பிரசாத், மற்றும் ரைசிங்சன் நிறுவனத்தின் பங்குதாரான வெங்கடேஷ்வரலு ஆகியோர் என்னுடைய நெருங்கிய நண்பர் என்றால் சரிதான். நான் ரூபாய் 25,00,000/– த்திற்கான தலா இரண்டு காசோலைகளை வாதி என்னிடம் கேட்டும் தாராமல் பல முறை தள்ளிபோட்டேன் என்றால் சரியல்ல. 21,15,496/– தொகை போடப்பட்டுள்ள தலா இரண்டு காசோலைகள் வாதி பெயரில் ரொக்கமாக்கப்பட்டது என்றால் சரிதான். ரூ.25,00,000/– தொகை போடப்பட்ட இரண்டு காசோலைகள் வாதி பெயரில் ரொக்கமாக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த இரண்டு காசோலைகளும் வேமூல பிரசாத், மற்றும் ரைசிங்சன் நிறுவனத்தின் பங்குதாரான வெங்கடேஷ்வரலு ஆகியோர் பெயர்களில் ரொக்கமாக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 பெற்ற பிறகு நான் வேமூல பிரசாத், மற்றும் ரைசிங்சன் நிறுவனத்தின் பங்குதாரான வெங்கடேஷ்வரலு ஆகியோரிடம் இது சம்மந்தமாக பேசினேன். நான் அவர்களிடம் சொன்ன விபரத்தை என்னுடைய பதிலுரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

3) 2ம் பிரதிவாதி துணி வியாபாரம் செய்து வருகிறார். பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 இரண்டு காசோலைகளும் வேமூல பிரசாத், மற்றும் ரைசிங்சன் நிறுவனத்தின் பங்குதாரான வெங்கடேஷ்வரலு ஆகியோர் பெயர்களில் ரொக்கமாக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் நான்கு காசோலைகள் மூலமாக கிரைய தொகையை கொடுப்பதாக சொன்னதன்

அடிப்படையில் தான் என்னுடைய வழக்கிறிஞர் வா.சா.ஆ.1–ல் இந்த விபரத்தை குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். பொதுவாக சொத்தை வாங்கும் போது அதற்குண்டான மொத்த கிரைய தொகை கொடுத்தால் அந்த கிரையம் செல்லத்தகுந்ததாக இருக்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 சொத்தை தவிர நான் வேறு எந்த சொத்தும் வாதியிடம கிரையம் வாங்கவில்லை. வாதியிடமிருந்து மொத்தம் 3 ஏக்கர் நான் பவர் ஏஜென்ட் மூலம் கிரையம் வாங்கினேன். வா.சா.ஆ.1 மூலம் 0.79 சென்ட் கிரையம் வாங்கிகேன். வேறு ஆவணம் மூலம் மீதி சொத்தை கிரையம் வாங்கினேன். மற்ற சொத்தின் கிரைய தொகையை நான் சரியாக கொடுத்துள்ளேன் என்றாலும் தாவா சொத்தின் கிரைய தொகையில் ரூ.50,00,000/– தொகை நான் வாதியிடம் இன்றைய தேதிவரை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இதர சொத்துக்கள் குறித்து எந்த வழக்கும் இல்லை என்றால் சரிதான். வாதி நேரடியாக இந்த சொத்தை என்னிடம் சொத்தை கொடுத்ததால் வேமூல பிரசாத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஒப்புக்கொண்ட மொத்த கிரைய தொகையை வாதியிடம் செலுத்ததால் வா.சா.ஆ.1 ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி என்னிடம் பல முறை மீத கிரைய தொகையை கேட்டும் நான் காலம் தாழ்த்தியதால் இந்த வழக்கு காலதாமதாக தாக்கல் செய்யப்படவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.01.27 12:45:55 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.